கடலூர் மாவட்டம் - செம்மங்குப்பத்தில் நிகழ்ந்த இரயில் விபத்தில்

# உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூலை 9-**

**கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் நிகழ்ந்த இரயில் விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்ததுடன் நிதியுதவியும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் நேற்று (8.7.2025) காலை நடந்த மோசமான இரயில் விபத்தில் விலைமதிப்பில்லாத இரண்டு இளம் பிள்ளைகளின் உயிர் பறிபோன செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன். வாழ வேண்டிய வயதில் உயிரிழந்த அந்தத் துளிர்களின் மரணம் என்னை ஆற்றொணாத் துயரில் ஆழ்த்துகிறது.

விபத்தில் உயிரிழந்த செல்வன் நிமிலேஷ் (வயது 12), த/பெ விஜயசந்திரகுமார்) மற்றும் செல்வி சாருமதி (வயது 16), த/பெ. திராவிடமணி) ஆகிய இருவரின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விபத்தில் காயமடைந்து கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நான்கு நபர்களுக்கும் சிறப்பான சிகிச்சை அளித்திடவும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும் இந்த விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன். பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

எம்.கிருஷ்ணமூர்த்தி – இரா.துரைராஜ் – எம். ஸ்ரீதரன்.எம்.சி. முன்னிலையில்

# சைதை மேற்கு 139 அ வட்டச் செயலாளர் சை.மு.சேகர் இல்ல விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மு.மகேஷ்குமார் – எம்.எல்.ஏ.க்கள் வாழ்த்தினர்

*சென்னை, ஜூலை 9 -*

சைதை மேற்கு பகுதி 139வது அ வட்டச்செயலாளர். சை.மு.சேகர் பேத்தி சஷ்மிதா பூப்புனித நீராட்டு விழா லட்சுமி ஹால்100அடி சாலை, அசோக்நகர், சென்னை.83 வட்டச்செயலாளர் சை. மு. சேகர். தலைமையில் எம். கிருஷ்ணமூர்த்தி சைதை மேற்கு பகுதி செயலாளர். 10வது மண்டலக்குழுத் தலைவர் இரா. துரைராஜ். சைதை கிழக்கு பகுதி செயலாளர், 13வது மண்டலக்குழுத் தலைவர், வழக்கறிஞர்.எம். ஸ்ரீதரன்.எம்.சி. சைதை.மா.அன்பரசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் . எம். எஸ். ஹரிபாபு. களக்காடி. எல்லப்பன்,முன்னிலையில் டி.என். சிவமணி,இ.வரதன்,மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ்,சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன் வரவேற்றிட மாவட்ட செயலாளர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் . மா.சுப்பிரமணியன். துணை மேயர் மு.மகேஷ்குமார்.

எம்.எல்.ஏ.க்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா. ஜெ. கருணாநிதி மற்றும் க. தனசேகரன். . பாலவாக்கம்.சோமு, பாலவாக்கம். விசுவநாதன், பாலவாக்கம். மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கர், வாசுகி பாண்டியன்,கோ. சு.மணி, கி.கண்ணன், மு. ராஜா, மின்னல் கந்தப்பன், எஸ்.டி.தங்கராஜ், ஆகியோர் வாழ்த்தினர்

பகுதி நிர்வாகிகள். வி.பி. ஜானகிராமன், சைதை.த.சம்பத், சைதை.ஆர்.ரமேஷ், கவிதா.கவுதமன், சைதை. சாதிக்.ஆர். ராஜ்குமார், வட்டச் செயலாளர்கள். அட்கோ. கமலநாதன், எஸ்.பி.கோதண்டன், தா. மோகன்குமார், நா. ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், ஆ. வரதன், கோட்டூர். கோ.சண்முகம், நேருநகர்.எஸ்.பாட்சா, ஜம்பு. முருகன், பூக்கடை.பழனி சாமி, ஆர்.கிருஷ்ணகுமார் மாவட்ட பிரதிநிதிகள். வீ. மதிவாணன், ஜி.கே.ராமசந்திரன்,கு.புகழ்வேந்தன், த. மணி,வே. முருகன், என்.நந்தகோபால், ஏ. மஜீத், இரா.சுதாபிரியன், எஸ். ஜெ. சலாம், வே.ரமேஷ்குமார், க.உமாபதி, பாரிநகர்.சசி,எஸ். ஆர். சீனிவாசன், நல்லேந்திரன்,ஜி. ஏழுமலை, கொடி. சுரேஷ்,

எஸ்.முகமது அலி, யமஹா. ராஜேஷ். கே.விஜயகுமார்,வி. வாசுதேவன், என்.ரமேஷ், எஸ். கண்ணன்ப.எழிலரசன், ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், எஸ். சரத்குமார்,மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம், ஆர் .வி.நகர். அ.அயாத் பாஷா,ஆ.சுப்பிர மணி, சி. டிகாசிநாதன், வி.சபரி, து. முரளி, என்.தீனதயாளன்,ஏ. எஸ்.பழனி, சைதை.எம்.எஸ். மணி, ஜிம் .க.பிரபு, கொடி. பாலா,பூ.பாஸ்கர், சார்ப். சரவணன் எஸ். மல்லிகா,சி.மங்கையர்திலகம். நியுகாலனி. சம்பத், மு.காத்தவராயன், ஆட்டோ.சேகர், எம்.சுந்தரேசன்,வி.ஆதிகேசவன், த.சேகர், ஜி.நாகதேவி,உமாமகேஷ்வரி, கொடி.கே.பாரி, கே. வெங்கடேசன், வி.வெங்கடேசன், ஜி.தங்கராஜ், கே.மணி கண்டன், டி.சரவணன், என்.எஸ். கார்த்திக்,த.வின்சென்ட், எஸ். அருண்குமார்.து. வடிவேலன், ஜி.ரஞ்சித், எஸ்.பி.தினேஷ்,உ. மகேஷ், ம. திலீபன், அருண், எஸ் முருகன், ஆர்.கண்ணன், ஜெ.தமிழ்ச்செல்வன், ன்.சண்முகம், ஆயில்.எம்.சரவணன். பா.மோ.கார்த்திக்,கா.மூர்த்தி, து.மா.பொ.சி அனைவரையும் வெ. புருசோத்தமன். ஏ. கார்த்திகேயன் மற்றும் பலர் வாழ்த்தினர்.

---

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

# வேப்பனபள்ளி கிழக்கு, வேப்பனபள்ளி மேற்கு - ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு - சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த "தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு" ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், வேப்பனபள்ளி கிழக்கு, வேப்பனபள்ளி மேற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்பட்டும் – ஓசூர் ஒன்றியம் ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு ஆகிய 3 ஒன்றியங்களாகவும் - சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு ஆகிய 3 ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட வேப்பனபள்ளி கிழக்கு, வேப்பனபள்ளி மேற்கு - ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு - சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு ஆகிய ஒன்றியங்கள், பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகஅமையும்.

வேப்பனபள்ளி கிழக்கு ஒன்றியம் : 1. சிகரமாகனப்பள்ளி, 2.வேப்பனபள்ளி, 3. நாடுவனப்பள்ளி, 4. மாரசந்திரம், 5. மாதேப்பள்ளி, 6. பில்லனகுப்பம், 7. கோடிப்பள்ளி, 8. சாமந்தமலை, 9. குந்தாரப்பள்ளி, 10. சின்னமனவாரனப்பள்ளி, 11. நாரலப்பள்ளி, 12. பெரியகோட்டப்பள்ளி, 13. எம். சி. பள்ளி ஆகிய 13 ஊராட்சிகள்.

**வேப்பனபள்ளி மேற்கு ஒன்றியம் :** 1. பதிமடுகு, 2. பாலனப்பள்ளி, 3.அலேகுந்தாணி, 4. தீர்த்தம், 5. குரியனப்பள்ளி, 6. ஐப்பிகானப்பள்ளி, 7. நேரலகிரி, 8. மனவாரனப்பள்ளி, 9. தம்மாண்டரப்பள்ளி, 10.சிந்தகும்மனப்பள்ளி, 11. சென்னசந்திரம், 12. குப்பாச்சிபாறை, 13.பீமாண்டப்பள்ளி ஆகிய 13 ஊராட்சிகள்.

**ஓசூர் வடக்கு ஒன்றியம் :** 1. நல்லூர், 2. பேகேப்பள்ளி, 3.சேவகானப்பள்ளி, 4. ஈச்சங்கூர், 5. பாகலூர், 6. பெலத்தூர், 7.தும்மனப்பள்ளி, 8. படுதேப்பள்ளி, 9. நந்திமங்கலம், 10. முத்தாலி, 11.சென்னசந்திரம், 12. கௌவரப்பள்ளி ஆகிய 12 ஊராட்சிகள்.

**ஓசூர் தெற்கு ஒன்றியம் :** 1. தொரப்பள்ளி அக்ரஹாரம், 2.ஒன்னல்வாடி, 3. அச்செட்டிபள்ளி, 4. கொத்தகொண்டப்பள்ளி, 5. பூனப்பள்ளி, 6.நாகொண்டப்பள்ளி, 7. கோபனப்பள்ளி, 8. எஸ். முதுகானப்பள்ளி, 9.முகலூர், 10. மாசிநாயகனப்பள்ளி ஆகிய 10 ஊராட்சிகள்.

**ஓசூர் கிழக்கு ஒன்றியம் :** 1. பேரண்டப்பள்ளி, 2. ஆலூர், 3.பி.குருபரப்பள்ளி, 4. பி.எஸ்.திம்மசந்திரம், 5. காட்டிநாயகன்தொட்டி, 6. பேரிகை, 7. பலவனப்பள்ளி, 8. கொளதாசபுரம், 9. பாலிகானப்பள்ளி, 10. அலசப்பள்ளி - பட்வரப்பள்ளி ஆகிய 10 ஊராட்சிகள்.

**சூளகிரி வடக்கு ஒன்றியம் :** 1. புக்கசாகரம், 2. வெங்கடேசபுரம், 3.அத்திமுகம், 4. பன்னப்பள்ளி, 5. கும்பளம், 6. பெத்தசிகரலப்பள்ளி, 7.நெரிகம், 8. சின்னாரன்தொட்டி, 9. காமன்தொட்டி, 10. கானலட்டி, 11.தோரிப்பள்ளி, 12. அங்கொண்டப்பள்ளி, 13. எ. செட்டிப்பள்ளி, 14.செம்பரசனப்பள்ளி ஆகிய 14 ஊராட்சிகள்.

**சூளகிரி தெற்கு ஒன்றியம் :** 1. சூளகிரி, 2. மாரண்டப்பள்ளி, 3.சிம்பல்திரடி, 4. காளிங்கவரம், 5. பஸ்தலப்பள்ளி, 6. சென்னப்பள்ளி, 7. இம்மிடிநாயகனப்பள்ளி, 8. மேலுமலை, 9. தியாகரசனப்பள்ளி, 10.மாரண்டப்பள்ளி ஆகிய 10 ஊராட்சிகள்.

**சூளகிரி கிழக்கு ஒன்றியம் :** 1. பங்கனப்பள்ளி, 2. அயர்னப்பள்ளி, 3.உல்லட்டி, 4. உத்தனப்பள்ளி, 5. கொம்மேபள்ளி, 6. சானமாவு, 7.துப்புகானப்பள்ளி, 8. பீர்ஜேப்பள்ளி, 9. ஒசஹள்ளி, 10. சாமனப்பள்ளி, 11. கோனேரிப்பள்ளி, 12. ஏனுசோனை ஆகிய 12 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற வேப்பனபள்ளி கிழக்கு, **வேப்பனபள்ளி மேற்கு – ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு – சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**வேப்பனபள்ளி கிழக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : டி.எஸ்.கருணாகரன்,** வேப்பனபள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**வேப்பனபள்ளி மேற்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : ஏ.எம். ரகுநாத்,** வேப்பனபள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**ஓசூர் வடக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : ஆர். கஜேந்திரமூர்த்தி,** ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

**ஓசூர் தெற்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : என். ராமமூர்த்தி,** ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

**ஓசூர் கிழக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : ஆர். லோகேஷ், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

**சூளகிரி வடக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : கே. நாகேஷ்,** சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**சூளகிரி தெற்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : கே.சி. பாக்கியராஜ்,** சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**சூளகிரி கிழக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : எம். முனிவெங்கடசாமி (எ) அப்பையா** சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 08.07.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

இதுவரை ரூ.6 கோடியே 27 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

அந்த வகையில்

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 27 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 08–07–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | கா.இப்ராஹீம்ஷா, 9வது வார்டு, பாலசமுத்திரம், பழனி, திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 2. | கே.ராமமூர்த்தி, பொன்குளம், பனைக்குளம், மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 3. | எம்.ராமர், கிளைச் செயலாளர், வேப்பங்குளம், திருவேங்கடம், தென்காசி | 25,000/– |
| 4. | எஸ். சண்முகையா, களப்பாகுளம், சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம் | 25,000/– |
| 5. | அ.ஜெயபாண்டி, செல்வநாயகபுரம், போல்பேட்டை பகுதி, தூத்துக்குடி | 25,000/– |
| 6. | செ.மாரியப்பன், குதிரை லாயத் தெரு, கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம் | 25,000/– |
| 7. | ஜே.பேபிசிங்,தெற்றிவிளை, அருமனை& அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் | 25,000/– |
| 8. | பெ.சேனாதிபதி, 5வது குறுக்கு தெரு, சக்தி நகர், புதுச்சேரி – 605013. | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

# தியாகராயர்நகர் கிழக்கு 131வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

*சென்னை, ஜூலை 9*

தியாகராயர் நகர் 131வது வட்டச் செயலாளர் மு.ம. செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி 131வது வட்டக் கழக பாக முகவர்கள், BLA2, BDA நிர்வாகிகள் கூட்டம் வட்ட அவைத்தலைவர் வி.டி.செல்வம் தலைமையில் இன்று (09.07.2025, புதன் கிழமை) மாலை 6.00 மணிக்கு மேற்கு மாம்பலம், போஸ்டல் காலனி, 4வது தெருவில் உள்ள மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர்நகர் கிழக்கு பகுதி அவைத்தலைவர் மு. மணிவண்ணன், தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஷ்வரன் எம்.சி., 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன் ஆகியோர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், BLA2, BDA நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

கே.எஸ்.வெல்டிங்ராஜா தலைமையில்

# 132 அ வட்டத்தில் வாகனப் பிரச்சாரம்!

*சென்னை, ஜூலை 9 -*

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு வழிகாட்டுதலின்படி' மெட்ராஸ்' என்பதை சென்னை என மாற்றிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கி மற்றும் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பில் தமிழக முதல்வர் அவர்களின் முன்னெடுப்பை விளக்கும் வகையில் மாவட்ட கழகம் சார்பில் வாகன பிரச்சாரம் 132 அ வட்டத்திற்கு உட்பட்ட கோடம்பாக்கம் ஸ்டேஷன் ரோடு, மற்றும் ரங்கராஜபுரம் 5 விளக்கு அருகில் 132 அ வட்டகழக செயலாளர் கேஎஸ். வெல்டிங்ராஜா தலைமையில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை.எம்.சி. திருமதி பா.கார்த்திகா பாஸ்கர்.எம்.சி. ஆகியோர் முன்னிலையில், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் என். எஸ்.. பாலசுப்பிரமணியம் தலைமை கழக பேச்சாளர் சண்முகநாதன் ஆகியோர் தமிழக அரசின் சாதனைகளை விளக்கி உரையாற்றினர்.

உடன் வட்டகழக, பகுதி கழக, மாவட்டகழ நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் கழக முன்னோடிகள் இதில் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கட்டிமேடு அ. பக்கீர் முகமது**

**ஜூலை 9 (2011)**



**இளமைப் பருவம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றி, திருத்துறைப்பூண்டி பகுதியில் பல கிளைக் கழகங்களை உருவாக்கி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.**

**கிளைக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல பொறுப்புகளை வகித்தவர்.**

**1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடன் சிறைக்குச் சென்றவர். தொடர்ந்து மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**